# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் II

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. உயிர்மெய்க்குறிலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மெ ☐ ஆ) தை ☐

இ) க் ☐ ஈ ) அ ☐

2. பெண்களின் இதழுக்குப் பாவலர் ஒப்பிடும் பழம்

அ) பேரீச்சை ☐ ஆ) கொவ்வை ☐

இ) மாதுளை ☐ ஈ ) கொய்யா ☐

3. நனைசுவர் என்பது

அ) வினைத்தொகை ☐ ஆ) பண்புத்தொகை ☐

இ) உவமைத்தொகை ☐ ஈ ) உம்மைத்தொகை ☐

4. இலக்கணநூல்களில் ஒன்று

அ) திருக்குறள் ☐ ஆ) நன்னூல் ☐

இ) மூதுரை ☐ ஈ ) நாலடியார் ☐

5. நடப்பித்தான் எனும் பிறவினையின் வினையடி

அ) நடந்து ☐ ஆ) நடந்த ☐

இ) நடந்தான் ☐ ஈ ) நடப்பி ☐

6. "மன்றிலிற் பல் கூத்தாட்டம் மனைதொறும் தமிழ்ப்பா நாட்டம்..." இங்கு மன்று என்பது

அ) பரவல் ☐ ஆ) அரங்கு ☐

இ) மங்குல் ☐ ஈ ) உணவு ☐

7. என் + உருண்டை என்ற சொல்லைச் சேர்த்தால்

அ) எள்ளுருண்டை ☐ ஆ) எள்உருண்டை ☐

இ) எள்ளுஉருண்டை ☐ ஈ) எள்ருண்டை ☐

8. உலகின் சிறந்த நூலக அறிவியலாளருள் ஒருவர்

அ) க.மு.செல்லப்பா ☐ ஆ) கே.நரசிம்மன் ☐

இ) எசு.ஆர்.இரங்கநாதன் ☐ ஈ) அல்பிரட்துரையப்பா ☐

9. பழக்கத்தின் வலிமை என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும். ☐

ஆ) குடிப்பது நீர் கொப்பளிப்பது பன்னீர். ☐

இ) சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும். ☐

ஈ) இரக்கப் போனாலும் சிறக்கப்போ. ☐

10. "எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்" என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ) தொல்காப்பியம் ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐

இ) மணிமேகலை ☐ ஈ) ஆத்திசூடி ☐

11. உடம்படுமெய்கள்

அ) வ்,ர் ☐ ஆ) ய்,வ் ☐

இ) ய்,ம் ☐ ஈ) வ்,க் ☐

12. மூடத்தனத்துக்குள் மூழ்கிக் கிடக்கும் குமுகாயத்தை எதிர்த்துப் பாடியவர்

அ) அம்பி ☐ ஆ) உதயைவீரையன் ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) இரவி ☐

13. துயிலும் இல்லத்திற்குச் சென்ற தாய் தன் மகனை நினைத்துக் கதறிக்கதறி அழுதாள். இச்சொல்லியத்தில் கதறிக்கதறி என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

14. மாதவி ____________ நகரை ஆணாக உருவகித்துப் பாடினாள்.

அ) யாழ் ☐ ஆ) மதுரை ☐

இ) வெள்ளூர் ☐ ஈ) புகார் ☐

15. அல்வழித்தொகை ____________ வகைப்படும்.

அ) இரண்டு ☐ ஆ) நான்கு ☐

இ) ஐந்து ☐ ஈ) மூன்று ☐

16. இலங்கையில் சோழர் ஆட்சிக்காலத்தில் புதிய தலைநகராக மாற்றப்பட்ட இடம்

அ) அநுராதபுரம் ☐ ஆ) பொலநறுவை ☐

இ) கண்டி ☐ ஈ) யாழ்ப்பாணம் ☐

17. உவமைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மான்விழி ☐ ஆ) ஒன்றிரண்டு ☐

இ) காய்கதிர் ☐ ஈ) வெண்தயிர் ☐

18. இராவணகாவியம் வெளியிடப்பட்ட ஆண்டு

அ) 1973 ☐ ஆ) 1958 ☐

இ) 1970 ☐ ஈ) 1948 ☐

19. மாந்தகுல முன்னேற்றத்திற்குத் தேவையானது விடாமுயற்சி. ____________

நாம் மனம் தளராது முயல வேண்டும்.

அ) அப்பொழுது ☐ ஆ) அதனால் ☐

இ) ஏனெனில் ☐ ஈ) இப்பொழுது ☐

20. ஏழைகளுக்கு உதவி செய்தீர்கள். இச்சொல்லியத்தில் தோன்றா எழுவாய்

அ) அவன் ☐ ஆ) நீ ☐

இ) நீங்கள் ☐ ஈ) அவர்கள் ☐

21. கண்ணனில் மாறன் நல்லவன். இச்சொல்லியம் உணர்த்தும் பொருள்

அ) நீங்கல் ☐ ஆ) ஒப்பு ☐

இ) எல்லை ☐ ஈ) ஏது ☐

22. "பொன்னான மேனியிலே ஒரு பொல்லாத நோய் வந்ததென்ன" என்ற பாடல்

அ) காதற்பாடல் ☐ ஆ) தொழிற்பாடல் ☐

இ) ஒப்பாரிப்பாடல் ☐ ஈ) தாலாட்டுப்பாடல் ☐

23. அஃறிணை ஒருமையைக் குறிப்பது

அ) இறைவன் ☐ ஆ) மான்கள் ☐

இ) மக்கள் ☐ ஈ) பட்டம் ☐

24. பார்த்த, நடித்த என்பன

அ) இறந்தகாலப்பெயரெச்சம் ☐ ஆ) எதிர்காலப்பெயரெச்சம் ☐

இ) நிகழ்காலப்பெயரெச்சம் ☐ ஈ) முக்காலப்பெயரெச்சம் ☐

25. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) விசும்பு ☐ ஆ) வானம் ☐

இ) விண் ☐ ஈ) தரை ☐

26. வேற்றுமையை ஏற்கும் சொல்

அ) பெயர்ச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) வினைச்சொல் ☐ ஈ) உரிச்சொல் ☐

27. கண்ணகி பிறந்தநாடு

அ) சோழநாடு ☐ ஆ) சேரநாடு ☐

இ) பாண்டியநாடு ☐ ஈ) ஈழநாடு ☐

28. அண்மை என்பதன் எதிர்ப்பொருள்

அ) உண்மை ☐ ஆ) ஒற்றுமை ☐

இ) சேய்மை ☐ ஈ) அழுகை ☐

29. உழவர்கள் பயிர்களைக் கண்ணிமைபோல் காக்கின்றனர். இதில் பயிர்களை என்பது

அ) எழுவாய் ☐ ஆ) செயப்படுபொருள் ☐

இ) பயனிலை ☐ ஈ) அடைமொழி ☐

30. நாகு என்பது

அ) பெண்மாடு ☐ ආ) பெண்மான் ☐

இ) பெண்யானை ☐ ஈ) பெண்குரங்கு ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நாட்டுப்புறக் கலைகள் நமது பண்பாட்டின் முகவரியாகத் திகழ்கின்றன. ஊர்களில் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் திருவிழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும் உழைத்துக் களைத்துப்போன கிராம மக்கள் தங்களின் பட்டறிவினைப் பாடல், ஆடல், கதை, நாடகம் எனப் பல வடிவங்களில் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். நாட்டுப்புறக் கலைகள் உழைத்துக் களைத்துப்போன உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வை ஊட்டின. அதற்கான கரணியம் அக்கலைகளில் மிளிர்ந்த மண் மணம் மாறா மக்களின் இயல்பு வாழ்க்கையின் வெளிப்பாடு. கும்மிப்பாட்டு, வில்லுப்பாட்டு, நையாண்டிப்பாட்டு, போன்ற நாட்டுப்புறக் கலைகள் உடல் நோக உழைக்கும் மக்களின் உணர்வோடு கலந்த உயிரோட்டமாக இருந்தன. ஒரு நாட்டில் கலைகள் மங்குவதற்கான கரணியம் அந்த நாட்டின் பண்பாடும் கலாசாரமும் சீரழிந்து கொண்டிருப்பதேயாகும். அன்று வயலில் பாடிக்கொண்டே விதை விதைத்த நம் உழவன், விதையோடு பண்பாடு என்ற வேரையும் சேர்த்தே நட்டான். ஆனால், இன்று தான் உண்டு தன் வேலையுண்டு என்று நாளும் பரபரப்பாக சுழன்று கொண்டிருக்கும் நகர மக்களின் வாழ்க்கையில் சுற்றுலாவிடுதிகள், திரையரங்குகள், மதுவிடுதிகள் என்பன அவர்களின் கலைத்திறன்களைக் குறைத்துவிட்டன. உழும்போதும் பயிரிடும்போதும் அறுவடையின்போதும் நெல்விளைச்சலுக்கு உதவிய கதிரவனுக்கு நன்றி செலுத்தும்போதும் கலைகளுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள் நம் தமிழர்கள் என்றால் மிகையாகாது .

1. கிராம மக்கள் தங்கள் பட்டறிவினை எவ்வெவ்வடிவங்களில் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்?

2. நமது பண்பாட்டின் முகவரியாகத் திகழ்பவை எவை?

3. ஒரு நாட்டின் கலைகள் மங்குவதற்கான கரணியம் யாது?

4. விதையோடு பண்பாடு என்ற வேரையும் சேர்த்தே நட்டவன் யார்?

5. நகர மக்களின் வாழ்க்கையில் கலைத்திறன்களைக் குறைத்தவை எவை?

| புள்ளிகள் 10 |
|---|

## 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. நாட்டார் பாடலில் சந்தனமரத்துக்கு ஒப்பிடப்படுபவர் யார்?

2. இலங்கை சோழர் ஆட்சியுடன் எத்தனை ஆண்டுகள் இணைந்திருந்தது?


3. யாழ்நூலகக் கட்டிடத்திற்கு எவ்வாறு பணம் திரட்டப்பட்டது?

4. இலங்கையின் தொடக்ககால அரசியல் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்ததற்கான காரணங்கள் எவை?

5. ஒருவருடைய இன அடையாளத்தைக் காட்டுவது எது என அம்பி கூறுகின்றார்?

6. சோழநாட்டின் எல்லையாக அமைந்த ஆற்றின் பெயர் என்ன?

7. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ) ______________________

ஆ) ______________________

இ) ______________________

ஈ) ______________________

புள்ளிகள் 10

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.

1.



2. சுற்றுச் சூழல் மாசடைந்தால் - நம்
சுற்றம் யாவும் துன்புறுமே!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தரப்பட்டுள்ள வினையடிகளை இறந்தகால வினைமுற்றாக மாற்றி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| ஓடு | ________________ | வா | ________________ |
| மடி | ________________ | இரு | ________________ |
| நில் | ________________ | தேடு | ________________ |

2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

இடவாகுபெயர் ________________________________

மரபுவழு ________________________________

ஆறாம் வேற்றுமைத்தொகை ________________________________

3. வினையாலணையும் பெயர் இடம்பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

________________________________________________

________________________________________________

4. மூவகை மொழிகளையும் தருக.

________________________________________________

5. பின்வரும் சொல்லியங்களில் உள்ள வேற்றுமை உருபுகளைக் கண்டறிந்து எழுதுக.

1. இந்தியாவின் தெற்கே இலங்கை உள்ளது. ____________
2. மன்னன் ஏழை மக்களுக்குப் பொருட்கள் வழங்கினான். ____________
3. நாம் நம் உறவுகளோடு சேர்ந்து வாழ வேண்டும். ____________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மாந்தனாகப் பிறப்பவர்கள் அனைவருமே முதுமைப் பருவத்தை அடைவர். மாந்த வாழ்க்கையில் முதுமைப் பருவம் பிறர் உதவியை வேண்டி நிற்கும் பருவமாகும். முதுமைக்காலத்தில் உடல்தளர்ந்து நடமாட முடியாத நிலை ஏற்படும். இப்பருவத்தில் பிள்ளைகளிடமிருந்து அன்பையும் அரவணைப்பையும் எதிர்பார்ப்பர். பெற்றோர் முதுமைப் பருவம் அடையும் போது அவர்களை அன்போடு பார்த்துக் கொள்வது ஒவ்வொரு பிள்ளைகளின் கடமையாகும். இன்றைய நவீன உலகில் ஒருவருடன் ஒருவர் பேசுவதற்கே நேரமின்றி ஓடிக்கொண்டே இருக்கின்றோம். ஆனாலும் தனிமையில் வீட்டிலிருக்கும் முதியவர்களுடன் பேசுவதற்கு சிறிது நேரமாவது ஒதுக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் தமது இளமைக்காலத்தின் பெரும்பகுதியை எமக்காகவே கழித்தவர்கள். எனவே முதியோரை அன்போடும் மதிப்போடும் பார்த்துக் கொள்ள வேண்டியது பிள்ளைகளின் கடமையாகும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

* சிலப்பதிகாரம்

* யாழ்நூலகம்

* நீர் தமிழ் படிக்கும் நோக்கமும் உமது இனத்திற்கு ஆற்ற விரும்பும் பணிகளும்
* புலம்பெயர் நாட்டில் தமிழ்க் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு
    - தமிழ்க் கல்வியின் இன்றியமையாமை
    - புலம்பெயர் மாணவரும் தமிழ்க்கல்வியும்
    - பிள்ளைகளின் தமிழ்க் கல்வியில் பெற்றோரின் பங்கு

புள்ளிகள் 20